கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.

MCOP No: 161/2020 நாள் 10.11.2025

சாட்சி ராஜீப் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் எ.ம.சா.2 ஆக 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு.K.மாரிராஜா என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜீப் | தாலுகா | |
| த–பெ | கணேசன் | தொழில் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சங்கரன்கோவில் |
| கிராமம் | | வயது | 33 |

**முதல் விசாரணை**

நான் சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாராக பணிபுரிந்து வருகிறேன். வட்டார் போக்குவரத்து அலுவலர் சங்கரன்கோவில் அவர்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து்அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளித்துக்கொள்ள வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம் **எ.ம.சா.ஆ.2**. மேற்படி சாட்சிய சம்மனில் சொல்லியுள்ளவாறு நான் ஆவணங்களின் நகல்களை கொண்டுவந்துள்ளேன். இராஜகுரு த.பெ.வேல்முருகன், தேவிப்பட்டினம் , சிவகிரி தாலுகா என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என்ற விபரத்தை சம்மந்தமான ஆவணங்களை நான் கொண்டுவந்துள்ளேனா என்று கேட்டால் அவரது பெயர் மற்றும் முகவரி விபரங்களை கொண்ட தற்போது நடைமுறையில் உள்ள போக்குவரத்து துறை சாரதி மென்பொருளில் மேற்கொண்ட ஆய்வில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் துலங்கப்படவில்லை. அவரது ஓட்டுநர் உரிமம் எண் மற்றும் பிறந்த தேதி அளித்தால் ஓட்டுநர் உரிமம் விபரங்கள் கணினியில் தேடிப்பார்த்து வழங்க இயலும். மேற்கண்ட விபரத்தை எமசாஆ.2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. பிறந்ததேதியை மட்டுமே வைத்துக்கொண்டு மேற்படி போக்குவரத்து துறை சாரதி மென்பொருள் மூலமாக ஓட்டுநர் உரிமத்தை கண்டறிய முடியாது. போக்குவரத்து துறை சாரதி மென்பொருள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக எழுத்து மூலமான நடைமுறை இருந்து வந்துள்ளது அதற்கான பதிவேட்டை நான் பார்வையிடவில்லை. மேற்படி பதிவேட்டை பார்வையிட்டால் மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளதா இல்லையா என்ற விபரம் தெரியவரும்.

**குறுக்குவிசாரணை மனுதாரர்கள் தரப்பில்**

விபத்து தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வட்டார போக்குவரத்து துறை அலுவலகம் சங்கரன் கோவில் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். எங்களது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில இருந்து ஓட்டுநர் உரிமம் வழங்கப்படாமல் வேறு ஒரு வட்டார போக்குவரத்து் அலுவலத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் வழங்கபபட்டிருந்தால் அந்த விபரம் எங்களுக்கு தெரியாது.

<u>மறுவிசாரணை அனுமதியுடன்</u>

பொதுவாக நிரந்தர முகவரி மற்றும் ஆதார் அட்டையில் உள்ள முகவரி கொண்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் வழங்க முடியும் என்றால் சரிதான்.

<u>மறு குறுக்கு விசாரணை –</u> இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 10th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.